8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

97. 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எம்-2) துறையின் 19-2-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 81-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 115(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

98. (i) *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/2011) 2011 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாள் முதல் செயலுக்கு வந்த நாளாக குறிப்பிட்டது குறித்தும்;* (ii) *வணிக வரி இணை ஆணையாளரை அவருடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியிலுள்ள யாதொரு வணிகரைப் பொறுத்தமட்டில் நியமன அதிகாரியாக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நாளிலிருந்து நியமித்தது குறித்தும்;* (iii) *முதன்மைச் செயலாளரை/வணிக வரி ஆணையாளரை, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/2011) 8(3) பிரிவின் நோக்கங்களுக்காக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நாளிலிருந்து அதிகாரியாக நியமித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (டி.1) துறையின் 29-10-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 130-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/2011) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

99. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி.1) துறையின் 29-10-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 131-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/2011) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2013 மே 13]

100. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே1) துறையின் 31-1-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

101. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே2) துறையின் 10-4-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 53-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

102. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே1) துறையின் 3-5-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 61-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

103. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

104. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)